# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Term Examination - 2021

FWC

பொருளியல் I

Economics I

Two Hours

Gr -13 (2021)

21 T I

**அறிவுறுத்தல்கள்:**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் மறுபக்கத்தில் உள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்து பின்பற்றுக.
- 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1),(2),(3),(4),(5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவதன் மூலம் காட்டுக.


01. வள ஒதுக்கீட்டுப் பிரச்சினை தொடர்பாக ஆய்வு செய்யும் பொருளியற் துறை எது?
1) பேரினப் பொருளியல் 2) சிற்றினப் பொருளியல் 3) நேர்ப் பொருளியல்
4) நியமப் பொருளியல் 5) நலப் பொருளியல்

02. பின்வருவனவற்றுள் மீள்புதுப்பிக்கக்கூடிய வளத்திற்கு உதாரணம்.
1) கனிய எண்ணெய் ஆகும்
2) பயிரிடப்பட்ட நிலம் ஆகும்
3) சமுத்திரத்தின் மீன்வளம் ஆகும்
4) கடற்கரைக்கு அண்மிய பிரதேசத்தின் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாகும்
5) இயந்திர உபகரணங்கள் ஆகும்.

03. பொருளாதார முறைமைகளின் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A – தனியார் சொத்துடமை
B – உழைப்பு தவிர்ந்த ஏனைய உற்பத்தி வளங்களின் உரிமை அரசுக்குரியது
C – சமூக நியாயத்துவத்தை ஏற்படுத்துவதற்கு அரச தலையீடு காணப்படுதல்.
D – வளப்பயன்பாடு தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை தனியாருக்குரியது.

மேலே தரப்பட்ட பண்புகளில் சமூக சந்தைப் பொருளாதாரத்தின் (Social Market economy) பண்புகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி எது?
1) A மற்றும் D 2) B மற்றும் C 3) A மற்றும் C 4) B மற்றும் D 5) A, C மற்றும் D

04. பின்வரும் வரிப்படம் பொருளாதாரம் ஒன்று தொடர்பான உற்பத்தி சாத்திய வளையியைக் காட்டுகின்றது
உற்பத்தி மட்டம் வளையியில் X இலிருந்து Y இற்கு நகர்வதனால் இன்றைய நுகர்வு, எதிர்கால பொருளாதார வளர்ச்சி வீதம் மீது ஏற்படும் மாற்றங்களின் சரியான சேர்க்கை எது?




| இன்றைய நுகர்வு | எதிர்கால பொருளாதார வளர்ச்சி வீதம் |
|---|---|
| 1. குறையும் | குறையும் |
| 2. அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 3. குறையும் | மாறாது |
| 4. குறையும் | அதிகரிக்கும் |
| 5. அதிகரிக்கும் | குறையும் |

05. ஒரு பொருளின் கேள்வி என்பது
1) ஒரு குறித்த விலையில் நுகர்வோர் அப்பொருளை கொள்வனவு செய்யத் திட்டமிடும் தொகையாகும்.
2) அப்பொருளின் விலை மற்றும் நுகர்வோனின் வருமான மட்டம் என்பவற்றிலிருந்து சுயாதீனமாகும்.
3) நுகர்வோனின் கொள்வனவுத் திட்டத்திலிருந்து சுயாதீனமாகும்.
4) எப்போதும் சமநிலைத் தொகைக்கு சமனானதாகும்
5) பல்வேறு விலைகளில் நுகர்வோர் கொள்வனவு செய்ய விரும்பும் பல்வேறு தொகைகளாகும்.

06. குறித்த பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறா நிலைமையில் மேல்நோக்கிச் செல்லும் நிரம்பல் கோடானது இடமிருந்து வலமாக சரிந்து செல்வதற்கான காரணமாக அமைவது?
1) வருமான விளைவும் பதிலீட்டு விளைவும்
2) குறைந்த விலைகள் அதிக கேள்வியினை ஏற்படுத்துதல்
3) அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு
4) குறைந்த விலைகள் அதிக வெளியீட்டுக்கு இட்டுச் செல்லுதல்.
5) மாறா அமையச் செலவு

07. கேள்விக் கோட்டின் வழியேயான மேல் நோக்கிய நகர்வு (Upward moving along the demand Curve) குறிப்பது.
1) குறித்த பண்டத்தின் விலை மாறாதபோது ஏனைய காரணிகள் மாற்றமடைவதன் காரணமாக கேள்விக்கோடு வலப்புறம் நகர்வடைதல்.
2) விலை மாறாதபோது ஏனைய காரணிகள் மாற்றமடைவதனால் கேள்விக்கோடு இடப்புறம் நகர்வடைதல்.
3) ஏனைய காரணிகள் மாறாதபோது குறித்த பண்டத்தின் விலை அதிகரிக்க அதன் கேள்வித் தொகை அதிகரித்தல்.
4) ஏனைய காரணிகள் மாறாதபோது குறித்த பொருளின் விலை அதிகரிக்க அதன் கேள்வித் தொகை குறைவடைதல்.
5) ஏனைய காரணிகள் மாறாதபோது குறித்த பொருளின் விலை குறைவடைய அதன் கேள்வித் தொகை அதிகரித்தல்.

08. நிறுவனமொன்று உற்பத்தி செய்த பொருளொன்றின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி – 0.6 ஆகும். இந்நிறுவனம் உற்பத்திப் பொருளின் விலையை உயர்த்துமாயின் அதன் வருவாய்.

| | |
|---|---|
| 1) அதிகரிக்கும் | 2) வீழ்ச்சியடையும் |
| 3) மாறாதிருக்கும் | 4) 6% இனை விடக் கூடுதலாக வீழ்ச்சியடையும் |

5) 6% இனை விடக் குறைவாக வீழ்ச்சியடையும்.

09. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டிச் சந்தையொன்றில் திறன் பேசிகளுக்கான (Smart phone) நிரம்பல் அதிகரிக்காதபோதும் அதன் கேள்வியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சமநிலை விலை, சமநிலை தொகை என்பவற்றின் மீது ஏற்படும் விளைவு என்னவாக இருக்கும்.
1) விலை கட்டாயமாக அதிகரிக்கும் ஆனால் தொகை அதிகரிக்கலாம், குறையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.
2) தொகை கட்டாயமாக அதிகரிக்கும் ஆனால் விலை குறையலாம், அதிகரிக்கலாம் அல்லது மாறாதிருக்கலாம்.
3) தொகை கட்டாயமாக குறையும் ஆனால் விலை அதிகரிக்கலாம், குறையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.
4) விலை, தொகை ஆகிய இரண்டும் கட்டாயமாக அதிகரிக்கும்.
5) விலை, தொகை ஆகிய இரண்டும் கட்டாயமாக குறையும்.

10. குறித்தவொரு நுகர்வோனின் சராசரி மாதாந்த வருமானம் ரூபா 30000 இலிருந்துரூபா 40000 ஆக அதிகரிப்பதாகவும் அம்மாதத்தில் நுகர்வோனால் நுகரப்பட்ட பொருளின் தொகை 30 இலிருந்து 20 ஆக வீழ்ச்சியடைவதாக கருதுக. இந்த நுகர்வோரின் குறித்த பொருளுக்கான வருமானம் கேள்வி நெகிழ்ச்சி யாது?

1) − 1 2) 0.75 3) -1.4 4) 1.8 5) 1

11. அரசு சீனிக்கு ஆகக்கூடிய விலையை நிர்ணயித்தமையினால் சந்தையில் ஏற்படும் விளைவு எது?
   1) மேலதிக சீனி உற்பத்தியை அரசாங்கம் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்படும்.
   2) வேலையின்மை போன்ற பிரச்சினைகள் தோன்றுதல்.
   3) மிகை முதலீட்டு நிலைமையொன்று உருவாதல்.
   4) மிகைக் கேள்வி காரணமாக சந்தையில் தொடர்ச்சியாக சீனிக்குப் பற்றாக்குறை காணப்படல்.
   5) சீனிக்கு காணப்படும் கேள்வியை அதிகரிக்கச் செய்தல்.

12. குறித்த பண்டத்தின் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

$$Qd = 6000 - 40P$$

$$Qs = -1000 + 60P$$


தற்போது அரசு குறித்த அலகு வரியினை விதித்ததன் காரணமாக சமநிலைத்தொகை 3080 அலகுகளாக மாற்றமடைந்தது எனின் அரசு விதித்த அலகு வரி யாது?

1) ரூ. 3 2) ரூ. 2 3) ரூ. 1 4) ரூ. 4 5) ரூ. 5

13. ஒரு போட்டிச் சந்தையில் விற்கப்படும் ஒரு பொருளின் நிரம்பல் தொழிற்பாடாது $Qs = -40 + 5P$ என்னும் சமன்பாட்டினால் தரப்படுகிறது.
சந்தையின் சமநிலை விலை ரூ. 50 ரூபாவாயின்
உற்பத்தியாளர் மிகையின் பெறுமதி

1) ரூபா. 5750 2) ரூபா. 4410 3) ரூபா. 3750 4) ரூபா. 2500 5) ரூபா. 3500

14. பின்வரும் வரிப்படத்தில் காட்டியது போன்று இலங்கையில் பால் உற்பத்திக்கு உதவுவதற்காக அரசாங்கம் ஒரு மானியத்தை பிரகடனம் செய்வதாக கருதுக.




பின்வருவனவற்றுள் எது அரசாங்கத்திற்கான மானியச் செலவைக் குறித்து நிற்கிறது?

1) $P_2P_3\,MY$ 2) $P_1P_3\,MX$ 3) $P_2P_1\,XY$

4) $OP_3MQ_2$ 5) $OP_2YQ_2$

15. எல்லை உற்பத்தியானது சராசரி உற்பத்திக்கும் சமனாகக் காணப்படும்போது
   1) சராசரி உற்பத்தி அதிகரிக்கும்
   2) எல்லை உற்பத்தியானது அதிகரிக்கும்
   3) சராசரி உற்பத்தி அதன் உச்சத்தில் இருக்கும்
   4) எல்லை உற்பத்தி அதன் உச்சத்தில் இருக்கும்
   5) மொத்த உற்பத்தி அதன் உச்சத்தில் இருக்கும்

16. நிறைபோட்டி நிறுவனமொன்றினது வெளியீடு 1000 அலகுகளாகும். எல்லைச் செலவு 40 ரூபாவும் சராசரி நிலையான செலவு 10 ரூபாவும் நிறுவனத்தின் அலகு சாதாரண இலாபம் 10 ரூபாவும் ஆகும் எனின் சராசரி மாறுஞ் செலவு யாது?
1) ரூபா 20 2) ரூபா 15 3) ரூபா 35 4) ரூபா 40 5) ரூபா 25

17. X பொருளை உற்பத்தி செய்வதற்கான எல்லைச் செலவு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| **வெளியீடு** | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| **எல்லைச் செலவு (ரூபா)** | 300 | 200 | 160 | 240 | 400 | 560 | 640 |

மொத்த நிலையான செலவு ரூபா 300 ஆயின் 5ம் அலகு வெளியீட்டின்போது சராசரி செலவு, சராசரி மாறும் செலவின் பெறுமதி யாது?


| **சராசரி செலவு (ATC)** | **சராசரி மாறும் செலவு** |
|---|---|
| 1) ரூபா 60 | ரூபா 320 |
| 2) ரூபா 300 | ரூபா 260 |
| 3) ரூபா 220 | ரூபா 320 |
| 4) ரூபா 260 | ரூபா 60 |
| 5) ரூபா 80 | ரூபா 340 |

18. ஓரினத்தன்மை வாய்ந்த அல்லது வேறாக்கம் செய்யப்பட்ட பொருள்களை நிரம்பல் செய்யும் பெரிய நிறுவனங்கள் சில காணப்படும்போது அது ஒரு,
1) இருவர் உரிமைச் சந்தையாகும் 2) தனியுரிமைப் போட்டிச் சந்தையாகும்
3) சிலருரிமைச் சந்தையாகும் 4) நிறை போட்டிச் சந்தையாகும்
5) தனியுரிமைச் சந்தையாகும்

19. வர்த்தக சகட வோட்டத்தின் எந்தக் கட்டம் பெரும்பாலும் அதிகரித்துச் செல்லும் நேர்க்கணிய உற்பத்தி இடைவெளியைக் கொண்டிருக்கும்.
1) செழிப்பு 2) பின்னடைவு 3) விரிவாக்கம்
4) அதிதாழ்ந்த புள்ளி 5) அதிகரிப்பு

20. தேசிய கணக்கீட்டில் பின்வரும் நடவடிக்கைகளில் எது உற்பத்தி வரம்பில் உள்ளடக்க வேண்டிய உற்பத்திச் செயற்பாடு.
1) மனித உழைப்பின்றி விருத்தியடையும் இயற்கை வளங்கள்
2) பயனற்ற சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள்
3) உற்பத்தி செய்த நிறுவனம் தவிர ஏனைய நிறுவன அலகுகளுக்காக உற்பத்தி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் சேவைகளும்
4) கொடுப்பனவின்றி வீட்டினுள் நிறைவேற்றப்படும் மனையாள் சேவைகள்
5) பணப்பத்திரங்களுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்.

21. பின்வரும் வரைபடம் கருதுகோள் ரீதியான பொருளாதாரத்தின் சேமிப்பு தொழிற்பாட்டைக் காட்டுகிறது.




வரை படத்தில் $Y_2$ மெய் வெளியீட்டு மட்டத்தில்

1) சேமிப்பு முதலீட்டைவிட அதிகமாக காணப்படுவதனால் எதிர்பாராத கையிருப்புக்களின் திரட்சி ஏற்பட்டுள்ளது.
2) பொருளாதாரத்தில் பேரினப் பொருளாதார சமநிலை ஏற்பட்டுள்ளது.
3) சேமிப்பு முதலீட்டைவிட அதிகமாக காணப்படுவதனால் எதிர்பாராத கையிருப்புக்களின் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
4) சேமிப்பு முதலீட்டைவிட குறைவாக காணப்படுவதனால் எதிர்பாராத கையிருப்புக்களின் திரட்சி ஏற்பட்டுள்ளது.
5) சேமிப்பு முதலீட்டைவிட குறைவாக காணப்படுவதனால் எதிர்பாராத கையிருப்புக்களின் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

22. தேசிய கணக்கீடு தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. (மில்லியன் ரூபா)

| | |
|---|---|
| மொத்த வெளியீடு (GVO) | 600 |
| இடைநிலை நுகர்வு | 200 |
| தேறிய வரி | 150 |
| நிலையான மூலதன நுகர்வு (CFC) | 100 |
| மூலப் பொருள் | 50 |

மேற்படி தகவலின்படி தேறிய உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி யாது?

1) ரூ. 200 மில்லியன் 2) ரூ. 400 மில்லியன் 3) ரூ. 450 மில்லியன்
1) ரூ. 600 மில்லியன் 5) ரூ. 500 மில்லியன்

23. தற்போது இலங்கையின் நடைமுறைச் சந்தை விலைகளில் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி அண்ணளவாக.

1) 74 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.
2) 79 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்
3) 78 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்
4) 84 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்
5) 88 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்

24. பின்வரும் அட்டவணை கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தில் நுகர்வு (C) செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம் (yd) என்பன பற்றிய தேசிய கணக்கீட்டுத் தரவுகளைக் காட்டுகின்றது.

| வருடம் | நுகர்வு (C) பில்லியன் ரூபா | செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம் (yd) (பில்லியன் ரூபா) |
|---|---|---|
| 1 | 600 | 1000 |
| 2 | 920 | 1400 |

மூன்றாவது வருடத்தில் அரசாங்க கொள்வனவில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பு தேசிய பொருளாதாரத்தை ரூபா 800 பில்லியனால் விரிவடையச் செய்தது. ஏனையன மாறாத நிலையில் அரச கொள்வனவில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது?

1) ரூ. 200 பில்லியன் 2) ரூபா 160 பில்லியன் 3) ரூ 100 பில்லியன்
4) ரூபா 80 பில்லியன் 5) ரூபா 60 பில்லியன்

25. பின்வருவனவற்றுள் எது மொத்த உள்நாட்டு உற்பத்தியை மிக அதிக அளவில் அதிகரிக்கச் செய்யும்?

1) அரசாங்க கொள்வனவுகளில் 100 பில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படல்
2) வரி அறவீடுகளில் 100 பில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படல்
3) அரசாங்க கொள்வனவுகள் மற்றும் வரி அறவீடுகள் ஆகிய இரண்டிலும் தலா 100 பில்லியன் ரூபா அதிகரிப்பு ஏற்படல்.
4) அரசாங்க கொள்வனவுகள் மற்றும் வரி அறவீடுகள் ஆகிய இரண்டிலும் தலா 100 பில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படல்.
5) அரசாங்க கொள்வனவு 200 பில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படல்.

26. பரிமாற்ற நோக்கப் பணக்கேள்வியுடன் மிக நெருங்கிய விதத்தில் தொடர்புபட்டுள்ள பணத்தின் தொழிற்பாடாக அமைவது,

1) பெறுமானத்திரட்டாகத் தொழிற்படல்
2) கணக்கீட்டு அலகாகத் தொழிற்படல்
3) பெறுமதியை அளவிடும் ஓர் அளவீடாகத் தொழிற்படல்
4) பரிமாற்றூடாகமாகத் தொழிற்படல்
5) பிற்போடப்பட்ட கொடுப்பனவுக் கருவியாகத் தொழிற்படல்

27. நிறைதொழில்மட்ட உற்பத்தியை மட்டத்தைத் தாண்டிப் பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வி அதிகரித்துப் பொது விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கான காரணமாக அமைவது,

1) தனியார் முதலீடு குறைவடைதல்
2) மெய்வட்டி வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சி
3) அரசாங்க செலவீட்டில் ஏற்படும் வீழ்ச்சி
4) பணநிரம்பலில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
5) கொள்கை வட்டி வீதங்களில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.

28. மத்திய வங்கியானது அதன் கொள்கை வட்டி வீதத்தினை அதிகரிக்கும்போது பின்வருவனவற்றில் எது நடைபெறும்?

1) பணக்கேள்வி வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்
2) பணக்கேள்வி அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் அதிகரிக்கும்.
3) பணநிரம்பல் வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் அதிகரிக்கும்
4) பணநிரம்பல் அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்
5) பணக்கேள்வி, பணநிரம்பல், சந்தை வட்டி வீதங்கள் ஆகியன அதிகரிக்கும்

29. வணிக வங்கி முறைமையொன்றிலுள்ள வங்கிகள் தமது வைப்புக்களில் 20% இனை காசொதுக்காகப் பேணுவதாகவும் இதில் ஒரு வங்கி ரூபா 200 மில்லியன் புதிய காசு வைப்பினை பெற்றுக் கொள்வதாகவும் கருதுக. புழக்கத்திலுள்ள பணத்தினளவில் மாற்றங்கள் எதும் ஏற்படா விடின் புதிய வைப்பின் மூலம் வங்கி முறை உருவாக்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவு யாது?

1) ரூபா 160 மில்லியன்  2) ரூபா 200 மில்லியன்  3) ரூபா 800 மில்லியன்
4) ரூபா 1000 மில்லியன்  5) ரூபா 750 மில்லியன்

30. கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பணநிரம்பல் 1500 மில்லியன் எனவும் மொத்த வங்கி வைப்புக்கள் ரூபா 1000 பில்லியன் எனவும் தேவைப்படும் ஒதுக்கு வீதம் 10% எனவும் வணிக வங்கிகள் மிகை ஒதுக்குகளை பேணவில்லை எனவும் கருதுக.
மத்திய வங்கியினாது ரூபா 5 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்களை வணிக வங்கியிடமிருந்து கொள்வனவு செய்யுமாயின் அதன் காரணமாக பணநிரம்பல் மாற்றமடையக்கூடிய உச்ச அளவு யாது?

1) 7.5 மில்லியன் 2) 12.5 பில்லியன் 3) 15 பில்லியன்
3) 3 பில்லியன் 5) 2.5 பில்லியல்

31. சில பண்டங்கள் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – விலக்குதல் விதிக்கு உட்படாமை

B – நுகர்வில் போட்டித்தன்மை இல்லை

C – நுகர்வில் போட்டித் தன்மை உடையது.

D – ஒரு நாட்டின் தேசிய எல்லையைக் கடந்த உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் அதன் பயனை அனுபவித்தல்.

இவற்றுள் உலக பொதுப் பண்டத்தின் இயல்புகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி எது?

1) A, C மற்றும் D 2) A, B மற்றும் C 3) A, B மற்றும் D
2) A மற்றும் B 5) D மட்டும்

32. சந்தை தோல்வி ஏற்படக் காரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

1) நிறுவனமொன்றின் உற்பத்திக்கு மிகைக் கேள்வி நிலவுவதனால் அந்நிறுவனத்தின் இலாபத்தில் ஏற்படும் அதிகரிப்பு.
2) தனியார் மற்றும் சமூக நன்மைகளுக்கிடையேயான வேறுபாட்டைச் சீர்செய்ய அரசாங்கம் தலையீடு செய்தல்.
3) வருமானம் மற்றும் செல்லத்தின் சமமற்ற பங்கீடு
4) நிறுவனம் உற்பத்தியை அதிகரிக்கும்போது சிக்கனமின்மைகள் அதிகரித்தல்
5) சந்தையில் நிலவும் போட்டித் தன்மை

33. ஒரு பொருளின் நுகர்வு நேர்க்கணிய வெளிவாரியை ஏற்படுத்துமாயின், அவ்வாறான பொருளின் சந்தைச் சமநிலையின்போது பின்வருவனவற்றுள் எது உண்மையாக இருக்கும்?

1) எல்லை சமூக நன்மையானது எல்லைத் தனியார் செலவைவிடக் குறைவு
2) எல்லை சமூக நன்மையானது எல்லைத் தனியார் நன்மையைவிட உயர்வாக இருக்கும்
3) எல்லை சமூக செலவானது எல்லை சமூக நன்மையைவிட உயர்வாக இருக்கும்
4) எல்லைச் சமூக நன்மையானது எல்லைத் தனியார் நன்மையைவிடக் குறைவாக இருக்கும்
5) எல்லைச் சமூகச் செலவும் எல்லைச் சமூக நன்மையும் சமனாகும்.

34. பின்வரும் கொள்கைத் தெரிவுகளில் எது கொவிட் - 19 பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீட்சியடையச் செய்ய வடிவமைக்கப்பட்ட பணக்கொள்கை மற்றும்இறைக் கொள்கைச் சேர்க்கையினைப் பிரதிபரிக்கின்றது?

1) வரிகள் மற்றும் பணநிரம்பல் ஆகிய இரண்டையும் குறைத்தல்
2) வரிகள் மற்றும் பணநிரம்பல் ஆகிய இரண்டையும் குறைத்தல்.
3) அரச செலவீனங்களை அதிகரிப்பதுடன் மத்திய வங்கி வட்டி வீதங்களைக் குறைத்தல்
4) வரிகள் மற்றும் கழிவீட்டு வீதங்கள் ஆகிய இரண்டையும் குறைத்தல்
5) குறை நிலை பாதீட்டை மேற்கொள்வதுடன் பிணையங்களை சிறந்த சந்தையில் விற்பனை செய்தல்.

35. பின்வருவனவற்றுள் நிதிக் கொள்கைக் கருவிகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி எது?
1) பணநிரம்பல், வட்டி வீதம், வங்கி வீதம்
2) அரசாங்க செலவு, அரச வருமானம், பொதுபடு கடன்
3) பொதுப்படு கடன், பணநிரம்பல், வட்டி வீதம்
4) காசு ஒதுக்கு வீதம், பணநிரம்பல், வங்கி வீதம்
5) அரச வருமானம், வட்டி வீதம், பணநிரம்பல்

36. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் தேறிய பணக்குறை என்பதன் மூலம் வரையறுக்கப்படுவது.
1) வரி வருவாய்க்கும் மூலதனச் செலவுகளுக்கும் இடையிலான வித்தியாசமாகும்.
2) மொத்த வருவாய்களுக்கும் மீளெழும் செலவீடுகளுக்கும் இடையிலான வித்தியாசம்
3) கடன் தவணைப் பணக் கொடுப்பனவு உள்ளடக்கப்படாத நிலையில் கணிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு பற்றாக்குறையாகும்.
4) மொத்த வருமானத்திற்கும் மொத்தச் செலவுக்கும் இடையிலான வித்தியாசம்
5) மொத்த வருவாய்களுக்கும் கடன்கள் மீதான வட்டி செலுத்தல்கள் நீங்கலான மொத்தச் செலவீட்டிற்கும் இடையிலான வேறுபாடாகும்.

37. A மற்றும் B ஆகிய நாடுகளில் ஓர் அலகு வளச்சேர்க்கையினைக் கொண்டு உற்பத்தி செய்யக் கூடிய துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் கார்களின் அளவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| பொருள் | நாடு A | நாடு B |
|---|---|---|
| மோட்டார் கார் | 40 | 4 |
| துவிச்சக்கரவண்டி | 120 | 20 |

ஒவ்வொரு நாடும் தான் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ள பொருளில் சிறக்குமியல்பு அடைவதாகக் கொள்க. இங்கு பரஸ்பரம் நன்மையளிக்கும் வர்த்தகம் இடம்பெற வேண்டுமாயின் மோட்டார் கார் மற்றும் துவிச்சக்கரவண்டிகள் இடையிலான பரிமாற்று விகிதம்.

1) ஓர் மோட்டார் காரிற்கு 3 துவிச்சக்கரவண்டிகளைவிட குறைவாக இருக்க வேண்டும்.
2) ஓர் மோட்டார் காரிற்கு 3 இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட துவிச்சக்கரவண்டிகளாக இருக்க வேண்டும்.
3) ஓர் மோட்டார் காரிற்கு 4 இற்கும் 120 இற்கும் இடைப்பட்ட துவிச்சக்கரவண்டிகளாக இருக்க வேண்டும்.
4) ஓர் மோட்டார் காரிற்கு 4 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட துவிச்சக்கரவண்டிகளாக இருக்க வேண்டும்.
5) ஓர் மோட்டார்காரிற்கு 20க்கும் மேற்பட்ட துவிச்சக்கரவண்டிகளாக இருக்க வேண்டும்.

38. நாடொன்றின் வர்த்தக மாற்று விகிதத்தில் வீழ்ச்சி நிலைமையை ஏற்படுத்தவல்ல ஒரேயொரு விலை மாற்றம் சேர்க்கை பின்வருவனவற்றுள் எது?

| | ஏற்றுமதிகளின் சராசரி விலை | இறக்குமதிகளின் சராசரி விலை |
|---|---|---|
| 1) | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| 2) | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| 3) | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| 4) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| 5) | மாறாது | வீழ்ச்சி |

39. சென்மதி நிலுவை அட்டவணையுடன் தொடர்புடைய கருதுகோள் ரீதியான தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன

| விடயம் | பெறுமதி (மில்லியன் ரூபா) |
|---|---|
| ஏற்றுமதி | 24 |
| வியாபாரம் கணக்கு மீதி | -23 |
| சேவைக் கணக்கு மீதி | 6 |
| முதலீட்டு வருமானம் (தேறியது) | -12 |
| இரண்டாந்தர வருமானம் (தேறியது) | 15 |

மேலுள்ள தகவல்களின்படி கட்புலனாகும் இறக்குமதி மற்றும் நடைமுறைக் கணக்கு மீதியைக் காட்டும் விடையானது.

| இறக்குமதி மில்லியன் ரூபா | நடைமுறைக் கணக்கு மீதி (மில்லியன் ரூபா) |
|---|---|
| 47 | -14 |
| 01 | 6 |
| 37 | 26 |
| 42 | 15 |
| 58 | -14 |

40. நெகிழும் நாணய மாற்று வீத முறையின் கீழ் பின்வருவனவற்றுள் எது ஐக்கிய அமெரிக்க டொலரின் ரூபாய் விலையினை அதிகரிக்கச் செய்யும்?
   1) ஐக்கிய அமெரிக்காவின் பணவீக்க வீதம் இலங்கையைவிட உயர்வாக இருத்தல்.
   2) ஐக்கிய அமெரிக்காவின் தேசிய வருமான அதிகரிப்பு இலங்கையைவிட உயர்வாக இருத்தல்
   3) இலங்கை ஆடைகள் மீதான ஐக்கிய அமெரிக்க பிரசைகளின் விருப்பம் அதிகரித்தல்.
   4) ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இலங்கைக்குள்வரும் இறக்குமதிகளில் ஏற்படும் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி
   5) மெய் வட்டிவீத அதிகரிப்பானது அமெரிக்காவில் இலங்கையைவிட உயர்வாக இருத்தல்.

41. சென்மதி நிலுவைப் பிரச்சினை மற்றும் வெளிநாட்டு நாணய ஒதுக்கு பிரச்சினைகளையுடைய நாடுகளுக்கு உதவும் நோக்கில் தாபிக்கப்பட்ட அமைப்பு எது?
   1) உலக வர்த்தக அமையம்
   2) சர்வதேச நாணய நிதியம்
   3) உலக வங்கி
   4) ஆசிய அபிவிருத்தி வங்கி
   5) மத்திய வங்கி

42. தற்போது சிறப்பு எடுப்பனவு உரிமையின் (SDR) அலகொன்றின் பெறுமதி ஐந்து பிரதான நாணயங்களின் நிறையிடப்பட்ட பெறுமதியினை உள்ளடக்குகிறது. அவையாவன,
   1) ஐக்கிய அமெரிக்க டொலர், பிரித்தானிய பவுண், யூரோ, ஜப்பானின் யென், சுவிஸ் பிராங்
   2) ஐக்கிய அமெரிக்க டொலர், சுவிஸ் பிராங், சீனா யுவான், யூரோ, அவுஸ்ரேலிய டொலர்.
   3) ஐக்கிய அமெரிக்க டொலர், கனேடிய டொலர், ரஷ்யாவின் ரூபின், யூரோ, சீனாவின் யுவான்.
   4) ஐக்கிய அமெரிக்க டொலர், பிரித்தானிய பவுண், ஜப்பானின் யென், யூரோ, சீனாவின் யுவான்.
   5) ஐக்கிய அமெரிக்க டொலர், பிரித்தானிய பவுண், ஜப்பான் தென், அவுஸ்ரேலிய டொலர்.

43. மிகத் துரிதமாக பொருளாதார வளர்ச்சியினை பெரும்பாலும் ஏற்படுத்தவல்ல ஒரு காரணிச் சேர்க்கையாக அமைவது,

1) தொழில் வாய்ப்புக்களில் ஏற்படும் ஓர் அதிகரிப்பும் சென்மதி நிலுவையில் குறைநிறை அதிகரிப்பும்.
2) முதலீட்டு மட்டம் மற்றும் தொழில்புரியும் சனத்தொகையின் அளவு என்பவற்றில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
3) வருமானம் சமனாகப் பகிரப்படுவதுடன் மாற்றல் செலுத்தல்கள் உயர்மட்டத்தில் இருத்தல்.
4) பணவீக்கம் துரிதமடைதல் மற்றும் தேசிய கடன்களை அதிகரித்தல்.
5) வெளிநாட்டு நேரடி முதலீடும் வட்டிவீதம் அதிகரித்தல்.

44. 2019இல் உலக வங்கியின் தலைக்குரிய மொத்த தேசிய வருமானத்தின் அடிப்படையில் இலங்கை எந்த நாடுகளின் வகைக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது?

1) தாழ்ந்த வருமான நாடு
2) தாழ்ந்த மத்திய வருமான நாடு
3) உயர் நடுத்தர வருமான நாடு
4) உயர் வருமான நாடு
5) மிக உயர்ந்த வருமான நாடு

45. இலங்கையில் வாழும் வீட்டுத்துறையினரின் குறைந்த வருமானம் பெறும் வகுப்பினரின் சராசரி மாதாந்த வருமானம் ரூபா 14450 மற்றும் உயர் வருமானம் பெறும் வகுப்பினரின் சராசரி மாதாந்த வருமானம் ரூபா 158950 ஆகும். மேலே உள்ள தகவல்களின்படி.

1) குறைந்த வருமான வகுப்பினர் முழு வருமானப் பரம்பலின் 11% ஆக உள்ளனர்.
2) சம வருமானப் பரம்பல் விலகிச் செல்வது அதிகமாகும்
3) வருமான ஏற்றத் தாழ்வு மிகவும் தாழ்ந்த மட்டத்தில் உள்ளது.
4) குறைந்த வருமானம் பெறுபவரிடம் சராசரி மாதாந்த வருமானத்தைவிட 11 மடங்குகளால் உயர்வாகச் சராசரி மாதாந்த வருமானத்தை உயர்ந்த வருமானப் பிரிவினர் பெறுகிறார்கள் என்பதாகும்.
5) வீட்டுத்துறையில் ஆகக்குறைந்த மற்றும் மத்திய வருமானப் பிரிவினருக்கு இடையில் 11% ஆனவர்கள் உள்ளனர்.

46. கற்பனை ரீதியான பொருளாதாரமொன்றின் ஊழியர் சந்தை தொடர்பான சில தரவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| **தொழில்புரியும் வயதுச் சனத்தொகை (மில்லியன்)** | **வேலையற்றோர் சனத்தொகை வீதம் 25%** | **வேலை வாய்ப்பு சனத்தொகை (மில்லியன்)** |
|---|---|---|
| 20 | 25 | 12 |

இப்பொருளாதாரத்தின் ஊழியப்படை பங்கு கொள்ளல் வீதம் யாது?

1) 20% 2) 40% 3) 60% 4) 80% 5) 30%

47. தற்போதைய டிஜிற்றல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பாரம்பரிய வேலையாட்கள் சிலர் தமது திறன்களுக்கான கேள்வியை முழுமையாக இழக்கின்றனர். இதனால் அவர்களின் சிலர் வேலையை இழக்கின்றனர். மறுபுறம் கணினி இயக்குபவர்களுக்கு உயர் கேள்வி நிலவுகிறது இத்தகைய வேலையின்மையானது,

1) சகடோட்ட வேலையின்மை எனப்படும்
2) உராய்வு வேலையின்மை எனப்படும்
3) இயற்கை வேலையின்மை எனப்படும்
4) கட்டமைப்பு வேலையின்மை எனப்படும்
5) மறைமுக வேலையின்மை எனப்படும்

48. 2019 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம், வேலையின்மை வீதம் மற்றும் பணவீக்க வீதம் என்பவற்றைக் காட்டும் சரியான விடை எது?

| | **பொருளாதார வளர்ச்சி வீதம் (%)** | **வேலையின்மை வீதம் (%)** | **பணவீக்க வீதம் (%)** |
|---|---|---|---|
| 1) | 7.5 | 5.5 | 7.6 |
| 2) | 4.5 | 6.0 | 4.8 |
| 3) | 2.8 | 5.2 | 2.5 |
| 4) | 3.3 | 4.3 | 2.8 |
| 5) | 2.3 | 4.8 | 3.5 |

49. பின்வருவனவற்றுள் 2019/20 காலப் பகுதியில் மனித அபிவிருத்திச் சுட்டெண் மற்றும் உலக மகிழ்ச்சி சுட்டெண் ஆகியவற்றில் இலங்கை அடைந்துள்ள நிலைகளின் உண்மையான சேர்க்கை,

| | **மனித அபிவிருத்திச் சுட்டெண்** | **உலக மகிழ்ச்சிச் சுட்ணெ்** |
|---|---|---|
| 1) | 73 | 140 |
| 2) | 73 | 71 |
| 3) | 70 | 120 |
| 4) | 72 | 129 |
| 5) | 68 | 112 |

50. பேண்தகு அபிவிருத்திக் குறிக்கோள்களில் ஆறாவது சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் பற்றியதாகும். இக்குறிக்கோளின் நோக்கம்.

1) 2030 ஆகும்போது தூய நீரை இலவசமாக பெறுதலாகும்.
2) 2030 ஆகும்போது சுகாதாரத்தை மேம்படுத்துவதாகும்.
3) எல்லோருக்கும் சுத்தமான நீரினைக் கிடைக்கச் செய்வதுடன் நிலைத்து நிற்கக்கூடிய சுகாதாரத்தினை மேம்படுத்தல்.
4) 2030 ஆகும்போது எல்லா நீர் நிலைகளையும் பாதுகாத்தல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தல்
5) 2030 ஆகும்போது சூழல் மாசடைதலை நீக்குதல்.

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**ஆறாம் தவணைப் பரீட்சை - 2021**

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 6th Term Term Examination - 2021

FWC

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொருளியல் II | Three Hours and ten minutes | 21 | T | II |
| Economics II | Gr -13 (2021) | | | |

## பகுதி II

**அறிவுறுத்தல்** : உபபிரிவு **"அ"**, உபபிரிவு **"ஆ"** ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

### உப பகுதி - 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

*01.* (i) அமையச் செலவு என்பதன் கருத்து யாது?
பொருளாதார வளங்களுக்கு அமையச் செலவு நேர்க்கணியமாகும் என்னும் கூற்றை விளக்குக. *(4 புள்ளிகள்)*

(ii) முயற்சியாளன் என்பவர் யார்? சந்தைப் பொருளாதாரமொன்றில் முயற்சியாளர்கள் ஏன் முக்கிய பங்கினை வகிக்கின்றனர்? *(4 புள்ளிகள்)*

(iii) சந்தைப் பொருளாதாரமொன்றில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் விலைப் பொறிமுறையின் பணி யாது? *(4 புள்ளிகள்)*

(iv) கோவிட் - 19 போன்றதொரு கொள்ளை நோய் காரணமாக ஒரு நாடு மேலும் மேலும் பொருளாதார முடக்கத்துக்கு உட்படுவதனால் வேலை வாய்ப்பில் ஏற்படும் பாதிப்பை உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி விளக்குக. *(4 புள்ளிகள்)*

(v) பொருளாதாரத்தில் வளங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டுமாயின் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் எவை? *(4 புள்ளிகள்)*

*02.* (i) ஒரு பொருளின் விலை குறையும்பொது அப்பொருளின் கேள்வித் தொகை அதிகரித்தது ஏன் என விளக்குக. *(4 புள்ளிகள்)*

(ii) கேள்வி நீட்டம் மற்றும் கேள்வி அதிகரிப்பு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை வரைபடம் ஊடாக விளக்குக. *(4 புள்ளிகள்)*

(iii) கேள்வி விதிக்கு முரணான சந்தர்ப்பங்களை விளக்குக. *(4 புள்ளிகள்)*

(iv) குறித்த ஒரு பண்டத்தின் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

*1)* கேள்விச் சமன்பாடு $Qd = 50 - P$
நிரம்பல் சமன்பாடு $Qs = 20 + 2P$
சந்தைச் சமநிலையின்போது நுகர்வோன் மிகை மற்றும் உற்பத்தியாளர் மிகையைக் கணிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

*2)* இப்பொருளுக்கு உற்பத்தியாளன் மீது விதிக்கப்படும் அலகு வரி காரணமாக நிரம்பல் சமன்பாடு $Qs = 8 + 2P$ என மாற்றமடைகிறது எனின் அலகு வரியின் அளவு யாது? *(1 புள்ளி)*

03\. (i) திறன்பேசிகளுக்கான (Smart phone) சந்தை கேள்வி வளையியை வலப்புறம் நகர்வடையச் செய்யும் காரணிகள் எவை? (4 புள்ளிகள்)

(ii) கிடையச்சை வெட்டிச் செல்கின்ற எந்தவொரு நேர்கோட்டு நிரம்பல் வளையியும் ஒன்றைவிடக் குறைந்த நிரம்பல் நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் விளக்குக. (2 புள்ளிகள்)

(iii) உற்பத்தியாளன் மீது அலகு வரியொன்று விதிக்கப்படும்போது அலகு வரி காரணமாக உற்பத்தியாளர் மிகையால் ஏற்பட்டுள்ள பாதிப்பை கேள்வி நிரம்பல் வரை படத்தினைப் பயன்படுத்தி விளக்குக? (4 புள்ளிகள்)

(iv) ஆகக்கூடிய விலைக்கட்டுப்பாடு என்றால் என்ன?
ஆகக்கூடிய விலைக் கட்டுப்பாடு விதிக்கப்படும் பொருட்களுக்கு உதாரணம் தருக. (2 புள்ளிகள்)

(v) தக்காளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நாட்டில் ஏற்பட்டுள்ள இடர்கால நிலைமையினால் தக்காளியை சந்தைப்படுத்த முடியாத சூழ்நிலையை எதிர்நோக்குவதாக கருதுக. தக்காளிக்கான சந்தையின் கேள்வி நிரம்பல் நிலைமைகள் பின்வரும் சமன்பாடுகளால் தரப்பட்டுள்ளன.

$$Qd = 500 - 10P$$
$$Qs = 200 + 5P$$

இங்கு $P$ என்பது கிலோ கிராமொன்றில் விலை ரூபாவிலும் $Q$ என்பது தொகை மெற்றிக் தொன்களிலும் தரப்பட்டுள்ளதாக கருதுக.

அ) சந்தைச் சமநிலை விலையும் தொகையும் யாவை? (2 புள்ளிகள்)

ஆ) விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் அரசாங்கம் குறை நிரப்புக் கொடுப்பனவு முறையொன்றை அறிமுகப்படுத்துவதாகக் கொள்க. இம்முறையின் கீழ் அரசு ஒரு கிலோ கிராம் தக்காளிக்கு விவசாயிகள் ரூ. 30 பெறுவதை உறுதி செய்கிறது. அத்துடன் விவசாயிகள் உற்பத்தி செய்யும் தக்காளி விளைச்சல் முழுவதையும் சந்தையில் காணப்படும் எந்தவொரு விலையிலும் விற்பனை செய்யுமாறு அறிவுறுத்துகின்றது.

1) விவசாயிகள் தற்போது எந்தளவு தக்காளியை நிரம்பல் செய்வார்? (1 புள்ளி)
2) விவசாயிகள் நிரம்பல் செய்யும் தக்காளிகள் முழுவதையும் விற்பனை செய்வதற்கு அவர்கள் என்ன விலையை அறவிட வேண்டியிருக்கும். (1 புள்ளி)
3) விவசாயிகள் குறை நிரப்பு கொடுப்பனவாக அரசாங்கத்திடமிருந்து எந்தளவு பணத்தைப் பெறுவார்?
4) குறை நிரப்பு கொடுப்பனவு திட்டம் அறிமுகப்படுத்திய பின்னர் உற்பத்தியாளர் மிகை நுகர்வோர் மிகையை கணிப்பிடுக. (2 புள்ளிகள்)

04\. (i) குறுங்கால உற்பத்தி செலவுடன் தொடர்புடைய எல்லைச் செலவு, சராசரி மாறும் செலவு, சராசரி செலவு கோடுகள் பொதுவாக U வடிவத்தில் காணப்படுவதற்குக் காரணம் குறுங்காலத்தில் குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி தொழிற்படுவதேயாகும். விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) பின்வருவன எவ்வாறு சராசரி மொத்த செலவினையும் (ATC), சராசரி மாறும் செலவினையும் (AVC) பாதிக்கின்றன எனக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

அ) எரிபொருள் செலவில் ஏற்படும் அதிகரிப்பு

ஆ) ஒப்பந்த அடிப்படையில் தேர்வுசெய்யப்பட்ட பணிப்பாளருக்கான வேதனத்தில் ஏற்படும் அதிகரிப்பு.

இ) உழைப்புக்கு வழங்கப்படும் கூலி வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சி

ஈ) காப்புறுதி தவணைக் கட்டணத்தில் ஏற்படும் வீழ்ச்சி. *(4 புள்ளிகள்)*

(iii) நிறுவனமொன்று உற்பத்தியை விரிவடையச் செய்யும்போது நிறுவனத்தின் சராசரி செலவு அதிகரித்துச் செல்வது எவ்வாறு அழைக்கப்படும்? அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

(iv) இலாப உச்சப்படுத்தலுக்கான நிபந்தனைகள் எவை?
விலையை ஏற்கும் ஓர் உற்பத்தி நிறுவனம் தொடர்பில் இந்நிபந்தனை எவ்வாறு அடையும்? *(4 புள்ளிகள்)*

(v) உற்பத்தியாளன் மிகை, பொருளியல் இலாபம், பொருளியல் வாடகை ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக. *(4 புள்ளிகள்)*

*05.* (i) பின்வருவனவற்றுள் ஒரு நாட்டின் நடப்பு வருடத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்படுவன எவை, சேர்க்கப்படாதன எவை எனக் குறிப்பிட்டு ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் உமது விடைகளை விளக்குக.

அ) கம்பனி முறிகளிலிருந்து கிடைத்த வட்டி வருமானம்.

ஆ) கிளிநொச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒரு நிறுவனத்திடமிருந்து ரூபா 2 மில்லியன் பெறுமதியான துணியை கொள்வனவு செய்தல்.

இ) மோட்டார் வாகன விற்பனையாளர் ஒருவர் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றை விற்பதன் மூலம் தரகுப் பணத்தைப் பெறுகிறார்.

ஈ) காப்புறுதி ஒன்றைக் கொள்வனவு செய்தல். *(4x1= 4 புள்ளிகள்)*

(ii) கருதுகோள் ரீதியான பொருளாதாரம் ஒன்றின் பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்பட்டுள்ளன.

| **விடயம்** | **பெறுமதி (மில்லியன் ரூபா)** |
|---|---|
| • ஊழியர் சம்பள வருமானம் (CE) | *4000* |
| • தேறிய தொழிற்பாட்டுமிகை | *3500* |
| • நிலையான மூலதன நுகர்வு | *1500* |
| • கலப்பு வருமானம் | *1200* |
| • உற்பத்தி மீதான வேறு வரிகள் கழி மானியம் | *300* |
| • தேறிய வரி | *1100* |
| • ஏனைய உலக நாடுகளிலிருந்தான தேறிய முதனிலை வருமானம் | *-500* |
| • ஏனைய உலக நாடுகளிலிருந்தான தேறிய இரண்டாம் நிலை வருமானம் | *1300* |

மேலுள்ள தரவுகளின் அடிப்படையில் பின்வருவனவற்றை கணிப்பிடுக.

1) அடிப்படை விலை மொத்த கூட்டப்பட்ட பெறுமதி

2) மொத்த உள்நாட்டு உற்பத்தி

3) தேறிய தேறிய வருமானம்

4) செலவிடத்தக்க மொத்த தேசிய உற்பத்தி *(4x2=8 புள்ளிகள்)*

(iii) தேசிய வருமானத்தின் சமநிலை மட்டமானது தேசிய வருமானத்தின் நிறை தொழில் மட்டத்திற்கும் சமமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இக்கூற்றினை விளக்குக.

*(4 புள்ளிகள்)*

(iv) மூடிய பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளாதாரத் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன. (சகல தரவுகளும் ரூபா மில்லியன்களில்)

நுகர்வு (C) = 100 + 0.8yd

முதலீடு (I) = 160

அரசாங்க கொள்வனவுகள் = 200

வரிகள் (T) = 200

அ) இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை நிர்ணைக்குக.

*(2 புள்ளிகள்)*

ஆ) அரசாங்கம் ரூ. 1900 மில்லியன் தேசிய வருமான மட்டத்தை அடைவதனை இலக்காகக் கொண்டுள்ளதாயின் அதற்காக அரசாங்க செலவு எந்தளவால் அதிகரிக்கப்பட வேண்டும்?

06. (i) மக்கள் தம்மிடம் பணத்தை வைத்திருப்பதேன்?
மக்கள் தம்மிடம் பணத்தை வைத்திருக்கும் அளவில் வருமான மட்டம் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்? *(4 புள்ளிகள்)*

(ii) உயர்வலுப்பணம் என்பதனால் கருதப்படுவது யாது?
மத்திய வங்கியால் எவ்வாறு உயர்வலுப் பணம்
உருவாக்கப்படலாம் என்பதை விளக்குக. *(4 புள்ளிகள்)*

(iii) மொத்தச் செலவினத்தின் கூறுகளை இனங்கண்டு ஒரு பொருளாதாரத்தின் மொத்த செலவினத்தில் ஏற்படும் அதிகரிப்பானது எவ்வாறு பணவீக்கத்திற்கு வழிவகுக்கக்கூடும் என்பதனை ஒரு வரைபடத்தின் உதவியுடன் விளக்குக. *(4 புள்ளிகள்)*

(iv) இ லங்கையில் உருவாகிய நிதி நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கும் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்கும் மத்திய வங்கியால் அண்மையில் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கை கருவிகளையும் அதன் தாக்கத்தையும் விளக்குக. *(4 புள்ளிகள்)*

(v) ஒரு நாட்டின் வர்த்தக வங்கி முறைமையினுள் இயங்கும் வர்த்தக வங்கியொன்றின் எளிமைப்படுத்தப்பட்ட ஐந்தொகை பின்வருமாறு,

| **பொதுப்புக்கள்** | **பெறுமதி (மில்லியன் ரூபா)** | **சொத்துக்கள்** | **பெறுமதி (மில்லியன் ரூபா)** |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 200000 | தேவைப்படும் ஒதுக்குகள் | 20000 |
| பங்குடமையாரின் மூலதனம் | 50000 | மிகை ஒதுக்குகள் | 10000 |
| | | பிணையங்கள் | 140000 |
| | | கடன்கள் | 80000 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 250000 | மொத்த சொத்துக்கள் | 250000 |

அ) தேவைப்படும் ஒதுக்கு வீதம் யாது? *(1 புள்ளி)*

ஆ) இவ்வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் தனது நடைமுறைக் கணக்கிலிருந்து ரூபா 5000 மில்லியன் ரூபாவை மீளப்பெற்றால் இக்காசு மீளப்பெறலின் காரணமாக இவ்வங்கியின் ஒதுக்குகள் எந்த அளவினால் மாற்றமடையும்? *(1 புள்ளி)*

இ) தேவைப்படும் ஒருக்கு வீதம் மாறாதிருக்கும் நிலையில் ரூ. 5000 மில்லியன் பணம் வைப்பிலிருந்து மீளப்பெறப்பட்டதன் பின்னர் இவ்வங்கியானது வழங்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச தொகை யாது? *(2 புள்ளிகள்)*

07. (i) பொதுப் பொருள் மற்றும் பொது வளங்களை வேறுபடுத்தி அவற்றிற்கு ஒவ்வொரு உதாரணம் தருக. *(4 புள்ளிகள்)*

(ii) பின்வருவன எவ்வகை வெளிவாரி விளைவு என்பதனைக் குறிப்பிடுக.

அ) காபனேற்றம் செய்யப்பட்ட இயற்கையான உரப்பாவனையை விவசாயப் பயிர்களுக்குப் பயன்படுத்துதல். *(4 புள்ளிகள்)*

ஆ) மரக்கைத்தொழில் காரணமாக இயற்கைக் காடுகள் அழிவடைதல்.

இ) கொரேனா தொற்று வியாதிகளுக்கு எதிரான தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளல்.


ஈ) வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையின் காரணமாக சுற்றாடல் மாசடைதல்.


(iii) நிரம்பல் பக்க பொருளாதார கொள்கையை வரைவிலக்கணப்படுத்தி நிரம்பல்பக்க ஊக்குவிப்புக் கொள்கை கருவிகளுக்கு உதாரணம் தருக.

(iv) பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு அரசாங்க பாதீட்டை எவ்வாறு பயன்படுத்தலாம்? *(4 புள்ளிகள்)*

(v) ‘‘படிப்படியாக அதிகரித்துச் செல்லும் பாதீட்டுப் பற்றாக்குறையினால் இலங்கையில் பாரியளவு பொதுப்படுகடன் அதிகரித்துள்ளது’’ இவ்வாறு அதிகரித்துச் செல்லும் பொதுப்படுகடனின் பொருளாதார விளைவுகளைக் குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

08. (i) பின்வரும் வரைபடமானது கோதுமை மற்றும் ஆடைகளை உற்பத்தி செய்யும் ஐக்கிய அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் உற்பத்திச் சாத்திய வளையிகளைக் காட்டுகிறது?



மேற்படி வரைபிலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் பகுதி (i), (ii) ஆகியவற்றிற்கு விடை தருக.

*1)* இவ்விரு நாடுகளில் எந்நாடு, எப்பொருள் தொடர்பில் சிறக்குமியல்பு பெறவேண்டும்? *(2 புள்ளிகள்)*

*2)* சிறக்குமியல்பின் பின்னர் இவ்விரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக மாற்று விகிதம் யாது? *(2 புள்ளிகள்)*

(ii) தாராள வர்த்தகத்தின் மீது நாடுகள் தடைகளை விதிப்பது ஏன் என விளக்குக. *(4 புள்ளிகள்)*

(iii) நாடொன்றின் வர்த்தக மாற்று விகிதத்தையும் வர்த்தக நிலுவையையும் வேறுபடுத்துக.

(iv) பெயரளவு பயனுறுதி நாணயமாற்று வீதத்திற்கும் மெய்ப் பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதத்திற்கும் இடையிலான வேறுபாட்டை குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

(v) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை இரட்டைப் பதிவு முறையைப் பயன்படுத்தி இலங்கையின் சென்மதி நிலுவை அட்டவணையில் எவ்வாறு பதிவு செய்வீர்?

அ) இலங்கை 50 மில்லியன் டொலர் பெறுமதியான தேயிலையை ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்தல்.

ஆ) மத்திய கிழக்கில் பணிபுரியும் இலங்கையர் இலங்கையிலுள்ள தமது பெற்றோருக்கு 30 மில்லியன் டொலர்களை அனுப்புதல்.

இ) இலங்கை முதலீட்டாளர் ஒருவர் மலேசியாவில் உள்ள பங்கு பரிவர்த்தனை நிலையில் முதலீடு செய்தமையால் 60 மில்லியன் டொலரை பங்கு இலாபமாகப் பெறுதல்.

ஈ) இலங்கைக்கு ஆரிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 100 மில்லியன் பெறுமதியான காசு செயற்திட்டமல்லா கொடையாக கிடைத்தது.

*09.* (i) பொருளாதார வளர்ச்சி, நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்ற எண்ணக் கருக்களை வேறுபடுத்துக. *(5 புள்ளிகள்)*

(ii) பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பிரதான வரையறைகள் எவை ? *(5 புள்ளிகள்)*

(iii) முழுவறுமை, சார்பு வறுமையை வேறுபடுத்துக. *(5 புள்ளிகள்)*

(iv) ஊழியப்படையில் பெண்களின் பங்குபற்றல் வீத அதிகரிப்பானது இலங்கை தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்ததேன்? விளக்குக. *(5 புள்ளிகள்)*

*10.* (i) "சனத்தொகை வளர்ச்சி மற்றும் உணவு ரீதியான மாற்றங்கள் என்பவற்றின் விளைவாக உணவுக்கான உலகளாவிய கேள்வி தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருகின்றன. எனவே இலங்கை போன்ற வளர்முக நாடுகள் வேளாண்மை துறையை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. வேளாண்மை துறையின் செயலாற்றத்தினை அதிகரிக்கும் வினைத்திறனான தொழில்நுட்பங்கள் காணப்பட்டபோதும் அவற்றைப் பயன்படுத்துவதில் இலங்கை எதிர்நோக்கும் சவால்களை குறிப்பிடுக.

*(5 புள்ளிகள்)*

(ii) உலகளாவிய நோய்த்தொற்றின் பரவல் காரணமாக நாடுகளினால் பின்பற்றப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் மரபுவழிப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல புதிய போக்குகள் தோற்றம் பெறுவதற்கு வழியமைத்திருந்தன. அவ்வாறான புதிய தகவல் தொழில்நுட்பவியலை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.

*(5 புள்ளிகள்)*

(iii) அண்மை காலமாக வழமையான வேலைச் சூழலில் பணிகளின் செயலாற்றம் முடங்கிய வேளையில் வீட்டிலிருந்து பணியாற்றல் (Work from home) கலாசாரம் தோற்றம் பெற்றுள்ளது. வீட்டிலிருந்து பணியாற்றுதலின் சாதக வளைவுகளை பரிசீலிக்குக.

(iv) இறக்குமதிப் பதிவீட்டுக் கைத்தொழில் கொள்கை என்றால் என்ன? விளக்குக.

*(4 புள்ளிகள்)*